1981 ஏப்ரல் 15]

கிறது. யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பெயர் தரப்படவில்லை. மற்றபடி தவறு செய்தவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புகளூர் நதி நீரேற்றுப் பாசன் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 695 — திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசன கூட்டுறவு சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன ?

(இ) அச்சங்கத்திற்குக் கட்டுப்பட்ட ஒரத்தை தளவாய் பாளையம், கோவிந்தம்பாளையம் திட்டப் பகுதிகள் பாசனம் பெறாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஈ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திருச்சி மாவட்டம் புகளூர் நதி நீரேற்றுப் பாசனக் கூட்டுறவு சங்கம் 1968 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) இச்சங்கத்தின் மூலம் சுமார் 2,214 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் சுமார் 1,101 ஏக்கர் நிலங்களுக்கு மட்டுமே தற்போது பாசன வசதி பெறும் வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

(இ) மற்றும் (ஈ) ஒரத்தை, தளவாய்பாளையம், கோவிந்தம் பாளையம் திட்டப் பகுதிகளுக்கான நிலத்தில் பாசனம் நடைபெற சில நடை முறை இடைஞ்சல்கள் உள்ளன. இத் திட்டப் பகுதிகளுக்கான விசையேற்றங்கள் மூலத்திட்டமான ''தெளிப்பான் முறைப் பாசனத்திற்'' கேற்ப புகளூர் கால்வாயில் அமைக்கப்பட்டன. உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக தெளிப்பான் முறைப்பாசனம் கைவிடப்பட்டு சாதாரண பாசனம் அளிக்க வேண்டியிருப்பதால் புகளூர் கால்வாயிலிருந்து நீர் இறைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டு அதற்குப்

பதிலாக காவிரி நதியிலிருந்து நீர் இறைக்க வேண்டுமென பொதுப் பணித்துறை நிபந்தனை விதித்துள்ளது. எனவே விசையேற்றங்கள் புகளூர் கால்வாயிலிருந்து காவிரி நதிக்கு மாற்றப்பட வேண்டியுள்ளன. அவ்வாறு, மாற்றுவதானால் கூடுதல் செலவு ஏற்படும். மேலும் காவிரி நதியிலிருந்து இத்திட்டப் பகுதிகளுக்கு நீர் எடுத்துச் செல்லும் வழியில் தனியார் நிலங்கள் குறுக்கிடுகின்றன. அவ்வாறு குறுக்கிடும் நிலப் பகுதிகளை ஆர்ஜிதம் செய்து குழாய்கள் பதிக்க வேண்டி வரும்.

மேற்கூறிய இடைஞ்சல்கள் இன்றி இத்திட்டத்தினால் பயன் பெறும் விவசாயிகள் நலனும் மற்றும் புகளூர் கால்வாய் அருகிலுள்ள இத்திட்டத்தை சேராத மற்ற ஆயக்கட்டுதார்கள் நலனும் பாதிக்காத வகையில் பாசன வசதி செய்வதற்கான வழி வகைகளை தலைமைப் பொறியாளர் உதவியுடன் இச்சங்கத்தின் தலைவரான திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆராய்ந்து வருகிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் முடிவான அறிக்கை கிடைத்த பின் மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, தனியார்கள் இப்படிப்பட்ட நதி நீரேற்றுப் பாசனத்தை செயல்படுத்த ஆரம்பிக்கும்போது ஓராண்டு காலத்தில் முடிந்துவிடுகிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு வரும்போது, அமைச்சரவர்கள் சொன்னமாதிரி 1968-ல் ஆரம்பிக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகியும் இன்று வரையில் அந்தச் சங்கம் செயல்படவில்லை. அதனால் கூட்டுறவுத் துறையில் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப் போய்விடுகிறது. ஆகவே, விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே பல்லாண்டு காலமாக தூங்கிக்கொண்டிருந்த இந்தத் திட்டத்தின் நடைமுறையைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று நானே கூட முயற்சி செய்து, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அந்தக் குழுவை அமைத்து, அவரே அது பற்றி ஆராய்ந்து அறிக்கை தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையில் சில விதிமுறைகளை ஒட்டி சங்கடங்கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதுபோல் அந்த விதிமுறைகளைத் தளர்த்தியும் நடைமுறைப்படுத்த அரசு உத்தரவிட்டிருக்கிறது.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

1981 ஏப்ரல் 15]

திரு. எம். சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசையேற்றங்களை புகளூர் கால்வாயிலிருந்து காவிரி நதிக்கு மாற்றவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்றுகின்ற திட்டத்திற்கான செலவை விவசாயிகளிடமிருந்து வசூலிக்காமல் அந்தச் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடமிருந்து அந்தச் செலவு குறித்து ஒரு தொகை வசூலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பம்மல் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

* வினா எண். *696*— திரு. பம்மல் நல்லதம்பி மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பம்மல் பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் புகுந்து குடிநீரைக் கெடுத்தல், சுகாதார கேடுகளை விளைவிப்பதைத் தடுக்க பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்தை ஏற்று உடன் செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், *(அ)* திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மக்களின் சுகாதாரத்தைக் கெடுப்பதோடு மட்டுமல்லாமல் குடிநீரையும் கெடுக்கின்ற அளவுக்கு இருக்கின்றது. இந்த நிலை பம்மல் பகுதியில் மட்டுமல்ல. பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை போன்ற பகுதிகளிலேயும் இதனால் குடிநீர் கெட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக இந்தக் கழிவுநீரை வெளியேற்றுவதில் ஒரு புதுத் திட்டத்தை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.